அறந்தாங்கி நகராட்சி ஆணையாளர் (கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: கு. கனிராஜ் பி.ஏ.,பி.எல்.,

ந.க.எண்.585/2026/எப்1 நாள் : 25 .04.2026

பொருள்:

மனைப்பிரிவு அனுமதி – அறந்தாங்கி நகராட்சி – மனைப்பிரிவு எல்.என்.புரம் வார்டு–D. பிளாக்–23, (சர்வேஎண். 234/7, 234/17) நகரபுல எண்.16/7, 16/15,16/41–ல் 4871.00 ச.மீபரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக

பார்வை:

1. மனுதாரர்கள் திரு..ஆர்.பிரபு ராமன் மற்றும் நான்கு நபர்கள் என்பவர்கள் இணைய தளம் மூலம் புதுக்கோட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் செய்து, விண்ணப்ப எண் 8H11OU3R/2026/TCP நாள்:06.02.2026
2. தானபத்திரம் ஆவண எண். 563/2026, நாள்.09.02.2026.
3. புதுக்கோட்டை மாவட்ட நகர்ஊரமைப்பு துறை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி SWP/LP/DTCP(PD) No – 24/2026 நாள் : 10.02.2026
4. நகரமன்ற தீர்மான எண். 199 நாள்: 25.02.2026

உத்தரவு:

பார்வை–1ல் காணும் மனுதாரர் அறந்தாங்கி நகராட்சி எல்.என்.புரம், பள்ளத்திவயல் கிராமம வார்டு–D. பிளாக்–23, (சர்வேஎண். 234/7, 234/17) நகரபுல எண்.16/7, 16/15,16/41–ல் 4871.00 ச.மீபரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்க கோரி விண்ணப்பித்து கொண்டதின் பேரில் ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பார்வை2ல் காணும் பத்திர ஆவணப்படி சாலை மற்றும் பொது உபயோக இடம் தான பத்திரம் ஆவண எண்.563/2026, நாள்.09.02.2026–ன்படி ஆணையாளர் பெயருக்கு பத்திரபதிவு செய்யப்பட்டு தாணமாக பெறப்பட்டுள்ளது.

பார்வை–3ல் மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களின் கடிதம் ந.க.எண். 8H11OU3R/2026/TCP நாள்:06.02.2026.–ன்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/LP/DTCP(PD) No – 24/2026 நாள் : 10.02.2026 எண்ணிடப்பட்டு 23 குடியிருப்பு மனைகளாக பிரித்து மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைதொடர்ந்துபார்வை–4ல்காணும் இந்நகர்மன்ற தீர்மானத்தின் அனுமதியின் படி மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களின் கடிதம் ந.க.எண். 8H11OU3R/2026/TCP நாள்:10.02.2026–ன்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வரைபட அனுமதி எண். SWP/LP/DTCP(PD) No – 24/2026 நாள் : 10.02.2026 எனவும் மற்றும் திட்ட அனுமதி எண்.24/2026 எனவும் எண்ணிடப்பட்ட 23 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகள் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளது, அதன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையர் (கூ.பொ)
அறந்தாங்கி நகராட்சி

இணைப்பு: மனைப்பிரிவுவரைப்படம்–1
பெறுநர் திரு, ஆர். பிரபு ராமன் மற்றும் நான்கு நபர்கள்,
249ஏ, நாகம்மாள் புரம் மணலூர். மணமேல்குடி

நகல்பணிந்தனுப்பப்படுகிறது.

1. துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை
2. சார்பதிவாளர், அறந்தாங்கி.
3. வட்டாட்சியர் மற்றும் நகர்சார் ஆய்வாளர் அறந்தாங்கி (இம்மனைப்பிரிவில் அமையும் பொது இடம் மற்றும் சாலை ஆகியவற்றை உட்பிரிவு செய்து நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் மனை உட்பிரிவு பணிகளை கண்காணித்து உட்பிரிவு மேற்கொள்ளப்பட வேண்டியது.)
4. நகராட்சி பொறியாளர், அறந்தாங்கி நகராட்சி (இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையை சாலைபதிவேட்டில் பதிந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது.)